# அண்டை வீட்டார்

அண்டை வீட்டாருடன் நல்ல உறவைக் கொண்டிருப்பது, நம் வாழ்க்கையை மேலும் இனிமையாக்கும். சுவிட்சர்லாந்தில், ஒரு புதிய வீட்டிற்குக் குடிபெயரும் போது, உங்கள் அண்டை வீட்டாருடன் உங்களை அறிமுகப்படுத்திக் கொள்வது வழக்கம்.

## தொடர்பு கொள்ளுதல்

அண்டை வீட்டாருடன் நல்ல உறவைக் கொண்டிருப்பது, நம் அனைவரின் வாழ்க்கையையும் மேலும் இனிமையானதாக மாற்றுகிறது. நல்ல உறவுகளை வளர்க்க, நீங்கள் புதிய அபார்ட்மெண்ட் அல்லது வீட்டிற்குக் குடிபெயரும் போது உங்கள் அண்டை வீட்டாருக்கு உங்களை அறிமுகப்படுத்திக் கொள்வது நல்லது.
பல பகுதிகளில், அண்டை வீட்டார் அவ்வப்போது ஒன்றுகூடும் பழக்கம் த்தைக் கொண்டுள்ளனர், எடுத்துக்காட்டாக, ஒரு பிளாக் அல்லது பார்பெக்யூ பார்ட்டி. ஒவ்வொருவருக்கும் தங்கள் அண்டை வீட்டாருடன் மேலும் கூடுதலான தொடர்பு கொள்ளவோ நட்பு பேணவோ அல்லது அத்துடன் நிறுத்திக் கொள்ளவோ சுதந்திரம் இருக்கிறது. நீங்கள் வேறு வழிகளிலும், அதாவது உங்கள் பகுதியில் உள்ள சங்கங்கள் மற்றும் கிளப்புகளின் (விளையாட்டு, பாடல் அல்லது பிற ) செயல்பாடுகளில் பங்கேற்பதன் மூலமும் மக்களைச் சந்திக்கலாம்.

## அபார்ட்மெண்ட் விதிகள்

பொதுவாக, பல அலகுகளைக் கொண்ட அடுக்குமாடி கட்டிடங்களில், அபார்ட்மெண்ட் விதிகள் உள்ளன. பெரும்பாலும், இந்த விதிகள் குத்தகை ஒப்பந்தத்தில் சேர்க்கப்படுகின்றன. இந்த ஆவணம் இணக்கமாக வாழ்வதற்கான விதிகளை அமைக்கிறது. உதாரணமாக, சலவை அறை மற்றும் பகிரப்பட்ட இடங்களை எவ்வாறு பயன்படுத்துவது.
அபார்ட்மெண்ட் விதிகளை மதிப்பது முக்கியம். குறிப்பாக அமைதி மற்றும் ஓய்வு நேரங்களை மதிக்கவும். இது சட்டத்தில் எழுதப் பட்டுள்ளது.
ஒரு விழா அல்லது நிகழ்வை நடத்த விரும்பினால், உங்கள் அண்டை வீட்டாருக்குத் தெரிவிப்பது முக்கியம். வீட்டின் நுழைவாயிலில் ஒரு காகிதத்தில் ஒரு குறிப்பை எழுதலாம். கொஞ்சம் சத்தம் இருக்கலாம் என்று நீங்கள் அறிவிக்கலாம். மக்கள் தகவல் தெரிவிக்கப்படுவதை விரும்புகிறார்கள்.

## முரண்பாடுகள்

அண்டை வீட்டார் அபார்ட்மெண்ட் விதிகளை மதிக்கவில்லை என்றால், அது தொந்தரவாக இருக்கலாம். அண்டை வீட்டாருடன் பிரச்சனை ஏற்பட்டால், அவர்களுடன் முதலில் அமைதியாகவும் மரியாதையாகவும் பேசவும். நிலைமை மேம்படவில்லை என்றால், வீட்டு உரிமையாளர் அல்லது வீட்டுவசதி நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளலாம்.
நீங்கள் மத்தியஸ்த உதவியையும் நாடலாம். ஒரு மத்தியஸ்தர் என்பவர் நடுநிலையான நபர், அவர் இரு தரப்பும் பேசிக் கொள்ளவும், ஒன்றாக ஒரு தீர்வைக் காணவும் உதவுகிறார்.
நிலைமை மோசமாக இருந்தால் அல்லது யாராவது அச்சுறுத்தல் அல்லது வன்முறை போன்ற ஆபத்தில் இருந்தால், நீங்கள் காவல்துறையை அழைக்கலாம்.
சுவிட்சர்லாந்தில் அவசர உதவி எண் 117 ஆகும்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/habitat/le-voisinage